போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்

I-A வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்.

SUPPLEMENT TO PART I-A OF THE FORT ST. GEORGE GAZETTE.

AUGUST 2, 1927.

நெ. 31.] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1927-ம் ௵ ஆகஸ்ட் ௴ 2௳. [PRICE, 6 *pies.*

கவர்ன்மெண்ட் விளம்பரங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு.

Tamil Translation of Notifications by Government.

லோகல் ஸெல்ப் கவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்ட்.

விளம்பரம்.

போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ், 1927-ம் ௵
ஜூலை ௴ 5௳.

ராஜதானிப்பட்டணத்துக்கு வெளியே செலாவணியாய்க்கொண்டிருக்கும் ப்ளேக் (மஹாமாரி) ரெகுலேஷன்கள்.

நெ. 832.—அபாயகரமான பெருவாரி வியாதியாகிய ப்ளேக் என்னும் மஹாமாரி சென்னை ராஜதானியைச் சேர்ந்த சில பாகங்களில் கண்டிருக்கிறபடியாலும், இதர பாகங்களில் காணுமென்று அச்சங்கொள்ளப்படுகிறபடியாலும், இந்த ராஜதானியிலே தற்காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கிற சட்டத்தின் சாதாரண நிபந்தனைகள் ஷை வியாதி உண்டாவதையோ அலலது பரவுவதையோ தடுப்பதற்குப் போதாமையாயிருக்கிறபடியாலும்,

1920-ம் ௵த்து 38-வது ஆக்டாகிய (அதிகாரங்களை) ஒப்புவிப்பதைக் குறித்த ஆக்டினால் திருத்தப்பட்டபடிக்குள்ள பெருவாரி வியாதிகளைக் குறித்த 1897-ம் ௵த்து ஆக்ட் 2-A பிரிவின்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைக்கொண்டு, பிரதேச கவர்ன்மெண்டார் - இது விஷயமாய் முன்னமே பிறப்பிக்கப்பட்டிருக்கும் சகல ரெகுலேஷன்களையும் ரத்துசெய்து அவைகளுக்குப் பர்த்தியாக, ராஜதானியில் சென்னபட்டணம் தவிர மற்ற எல்லா பாகங்களிலும் 1927-ம் ௵ ஜூலை ௴ 15௳ முதல் ஒரு வருஷகாலத்துக்கு அனுசரிக்கும்படியாக அடியிற்கண்ட அங்காமியான ரெகுலேஷன்களைக் களிகூர்ந்து நிர்ணயிக்கிறார்கள் :—

1. இந்த ரெகுலேஷன்களிலே—

(a) 'தொத்துவியாதி சம்பந்தப்பட்ட விஸ்தீர்ணம்' என்பது - ப்ளேக் என்னும் தொத்துவியாதி சம்பந்தப்பட்டிருப்பதாக இந்த ரெகுலேஷன்களின்படி பிரதேச கவர்ன்மெண்டாராலாவது, அவர்களுடைய அதிகாரத்துக்குட்பட்டு ஜில்லா கலெக்டராலாவது பிரசித்தம் செய்யப்படுகிற யாதொரு விஸ்தீர்ணம் என்று அர்த்தமாகும்.

(b) 'பிரதேச அதிகாரி' என்பது - பிரதேச வைத்திய உத்தியோகஸ்தரென்றாவது, அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர் எவரும் இராவிட்டால் கிராமப் பெரியதனக்காரர் என்றாவது ஹெல்த் இன்ஸ்பெக்டரென்றாவது ப்ளேக் சம்பந்தமான காரியங்களுக்காக ஜில்லா கலெக்டரால் பிரதேச அதிகாரியாய் நியமிக்கப்பட்ட வேறே யாதொரு நபரென்றாவது அர்த்தமாகும்.

(c) 'ப்ளேக் ஆபிஸர்' என்பது - டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபிஸர் என்றும் மியுனிஸி

பல் ஹெல்த் ஆபிஸர் என்றும் தம்முடைய அதிகார வரம்புக்குள் ரெவினியு டிவிழன் ஆபிஸர் என்றும் அர்த்தமாவதுமல்லாமல், குறித்த யாதொரு விஸ்தீர்ணத்துக்கு ப்ளேக் ஆபிஸராக கவர்ன்மென்டாரால் அல்லது கலெக்டரால் நியமிக்கப்படக்கூடிய வேறே யாதொரு நபரென்பதும் அதில் அடங்கும்.

2. எவ்விடத்தில் ப்ளேக் உற்பத்தியாகி ஒருவருக்காவது பலருக்காவது கண்டிருக்கிறதோ அல்லது எவ்விடத்தில் எலிகளுக்குள் ப்ளேக் கண்டிருப்பதாக ருஜுவாயிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு இடத்தையாவது விஸ்தீர்ணத்தையாவது பிரதேச கவர்ன்மென்டார் - **போர்ட் ஸெயின்ட்** ஜார்ஜ் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அந்த விளம்பர மூலமாய், ப்ளேக் சம்பந்தப்பட்டிருப்பதாக நிர்ணயிக்கலாம். அதே மாதிரியான சந்தர்ப்பங்களில், ஜில்லா கலெக்டரானவர் - தம்முடைய ஜில்லாவில் யாதொரு இடம் அல்லது விஸ்தீர்ணமானது ப்ளேக் சம்பந்தப்பட்டிருக்கிறதென்று தண்டோரா மூலமாகவும் ஜில்லா கெஜெட்டில் பிரசுரம் செய்தும் பிரசித்தம் செய்யலாம்; அந்தப்படி தாம் செய்திருக்கும் சங்கதியை உடனே அவர் கவர்ன்மென்டுக்குத் தெரிவிக்க வேண்டும்.

3. தொத்துவியாதி சம்பந்தப்பட்ட யாதொரு விஸ்தீர்ணத்திலாவது தொத்துவியாதி சம்பந்தப்பட்ட விஸ்தீர்ணத்துக்கு அடுத்திருக்கும் யாதொரு ஜில்லாவிலாவது, கலெக்டரானவர் - ஏற்கனவேயுள்ள யாதொரு மார்க்கெட்டை மூடிவிட்டு, மார்க்கெட்டுகளை வைப்பதற்காகப் பிரத்தியேகமான இடங்களை ஏற்படுத்தலாம்; மேலும், அவர் - தொத்துவியாதி சம்பந்தப்பட்ட விஸ்தீர்ணத்திலிருந்தாவது அப்படிப்பட்ட விஸ்தீர்ணத்துக்காவது விற்பனைக்காக சாமான்களைக் கொண்டுவரும் நபர்கள் இன்ன எல்லைகளைத் தாண்டிப்போவது சட்டசம்மதமாகாதென்று நிர்ணயிக்கலாம்.

4. தொத்து வியாதி சம்பந்தப்பட்ட விஸ்தீர்ணத்திலே, கலெக்டராகிலும் கலெக்டருடைய அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு யாதொரு ப்ளேக் ஆபிஸராகிலும் - தொத்து வியாதி சம்பந்தப்பட்ட வீடுகளையும் அவைகளுக்கு அருகாமையிலிருக்கும் வீடுகளையுமாவது பொதுவாய்த் தொத்துவியாதி சம்பந்தப்பட்ட யாதொரு பிரதேசத்தையாவது காலிபண்ணும்படி உத்தரவு செய்யலாம் :

ஆனால், காலிசெய்யும்படி கட்டாயப்படுத்துவதற்கான உத்தரவைப் பிறப்பிப்பதற்காவது பிறப்பிக்க அதிகாரம் கொடுப்பதற்காவது முன்பாக, கலெக்டரானவர் - காலிசெய்து வெளியே அனுப்பப்பட்ட ஜனங்களுக்கு அவசியமான ஜல சர்ப்பராவுடன் காவலுக்கும் பாதுகாப்புக்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்து, நியாயமான தூரத்துக்குள் தங்குவதற்குத் தகுந்ததாயும் போதுமானதாயுமுள்ள இடத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்; அல்லது, அப்படி தங்குவதற்கு இடமும் ஜல சர்ப்பராவும் ஸர்க்கார் சம்பந்தமில்லாத தனி நபர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவென்று திருப்திகரமாகத் தெரிந்துகொள்ளவேண்டும். மேலும், சீதோஷ்ண நிலைமைகளைக் கவனிக்கும்போது, காலிசெய்யும்படி கட்டாயப்படுத்துவது வியாதி பின்னும் பரவுவதைத் தடுப்பதற்கு அவசியமாயிருக்கிறதென்றாகிலும் பாதிக்கப்பட்ட ஜனங்களுக்கு நன்மை செய்வதாகுமென்றாகிலும் கலெக்டரானவர் திருப்திகரமாய்த் தெரிந்துகொள்ளவேண்டும்.

தாங்களாகவே வீடுகளைக் காலிசெய்கிற அல்லது இந்த ரெகுலேஷன்படி காலிசெய்து வெளியே அனுப்பப்படுகிற சகல நபர்களையும் கலெக்டரானவர் தாம் ஏற்படுத்தும் யாதொரு இடத்தில் வசிக்கும்படி உத்தரவு செய்யலாம்.

யாதொரு பிரதேசத்தைத் தொத்துவியாதி சம்பந்தப்பட்டதாக நிர்ணயிப்பதற்கு முந்திய ஒன்பது மாத காலத்தில், ப்ளேக் வாராதிருக்கும்பொருட்டு சித்திகரமாய் ப்ளேக் மருந்து குத்தப்பெற்றிருக்கிற நபர்களுக்காவது, அந்தப்படி நிர்ணயிக்கப்பட்டதிலிருந்து 24 மணி நேரத்துக்குள் தாங்களே ப்ளேக் மருந்து குத்திக்கொள்ளுகிற நபர்களுக்காவது இந்த விதியிலுள்ளதெதுவும் பிரயோகப்படுவதாகக் கருதப்படமாட்டாது.

5. தொத்து வியாதி சம்பந்தப்பட்ட விஸ்தீர்ணத்திலே, ப்ளேக் ஏற்பாடுகளுக்குச் சம்பந்தமான எவையேனும் காரியங்களுக்காக யாதொரு கட்டிடம் அல்லது இடம் வேண்டியிருந்து அந்தக் காரியங்களுக்கு அது தகுதியானதென்று டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபிஸர் அபிப்பிராயப்பட்டால், அப்படிப்பட்ட கட்டிடம் அல்லது இடத்தில் கலெக்டரானவர் - 1894-ம் ஞூஷத்து நிலம் எடுத்துக்கொள்வதற்கான ஆக்டின் நிபந்தனைகளை அனுசரிக்காமலே பிரவேசித்து, அதைத் தம் வசப்படுத்திக்கொண்டு உபயோகித்துக்கொள்ளலாம், அல்லது அவ்விதம் பிரவேசித்து தம் வசப்படுத்திக்கொண்டு உபயோகித்துக்கொள்ளும்படி யாதொரு நபரை நியமித்தனுப்பலாம் : ஆனால், அப்படிப்பட்ட கட்டிடம் அல்லது இடம் எவருடைய அனுபோகத்திலாகிலும் இருந்தால், அந்த அனுபோகதாருக்கு எழுத்துமூலமாய் இருபத்தினான்கு மணிநேர நோடிஸ் கொடுக்கவேண்டும், அல்லது அப்படிப்பட்ட கட்டிடம் அல்லது இடத்தில் நன்றாய்த் தெரியும்படியாக அதை ஒட்டவேண்டும். அப்படிப்பட்ட கட்டிடம் அல்லது இடத்தின் சொந்தக்காரராவது குத்தகைதாரராவது - அந்த நிலம் அல்லது கட்டிடம் எவ்வளவு காலம் ப்ளேக் சம்பந்தமான காரியங்களுக்காக உபயோகிக்கப்படக்கூடுமோ அவ்வளவு காலத்துக்குக் கலெக்டரால் நிர்ணயிக்கப்படும் நியாயமான வாடகையைப் பெற அர்ஹராவார்; மேலும், கலெக்டரானவர்-யாதொரு கட்டிடம் மேலேகண்டபடி உபயோகிக்கப்படுவது நின்றுவிடும்போது, அதைப் பூர்த்தியாக சுத்தம் செய்து, சொந்தக்காரர் விரும்பும் பட்சத்தில் அதன் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் சுண்ணாம்பு அடிக்கும்படியும் செய்யவேண்டும்.

6. ப்ளேக் பரவுவதைத் தடுப்பதற்காக யாதொரு குடிசை அல்லது கொட்டகையை அழித்துவிடுவது அவசியமென்று கலெக்டர் அபிப்பிராயப்பட்டால், அவர் - அந்த குடிசை அல்லது கொட்டகையையும் அது எவைகளினால் அமைக்கப்பட்டிருக்கிறதோ அந்த சாமான்களையும் அழித்துவிடுவதற்காக சுருக்க வகையான ஏற்பாடுகள் செய்யலாம்.

7. கலெக்டரானவர் - குடியிருக்கும் யாதொரு வீட்டையாவது சாமான்கள் இறக்கும் யாதொரு இடத்தையாவது ரெயில்வே சாமான் கொட்டகையையாவது தானியத்தைச் சேர்த்துவைப்பதற்காக உபயோகிக்கப்படும் யாதொரு இடத்தையாவது பார்வையிடும்படியும் அவைகளில் காணப்படும் எலிகளையெல்லாம் அழித்துவிடும்படியும் கட்டளையிடலாம்; மேலும், அவர் - எலிகளை அழிக்கும் காரியத்தைச் சுலபமாக்குவதற்காக, (அவ்விடத்திலுள்ள) யாதொரு தானியம் அல்லது இதர வியாபார வஸ்துக்களைச் சிறிது காலத்துக்கு அப்புறப்படுத்தும்படி உத்தரவு செய்யலாம்.

8. கலெக்டரானவர் - ரெயில் மார்க்கமாகவாவது ரஸ்தா மார்க்கமாகவாவது வேறே விதமாகவாவது கொண்டுபோகப்படும் யாதொரு தானிய ஒப்படையைத் தம்முடைய ஜில்லாவில் எந்த இடத்திலாகிலும் பரிசோதிக்கும்படியும், அவசியமானால் அதை இறக்கி தாம் நிஷ்கரிஷை செய்யக்கூடிய மாதிரியாகவும் காலத்துக்கும் வெயிலில் போட்டுவைக்கும்படியும் கட்டளையிடலாம்.

9. ஒவ்வொரு வீட்டுக்காரரும் ஒவ்வொரு வைத்தியாப்பியாசியும் - எவருக்காவது ப்ளேக் கண்டிருப்பதாகவாகிலும், தசிரகோளங்களில் வீக்கத்தோடு கூடிய சுரம் எவருக்காவது கண்டிருப்பதாகவாகிலும், எலிகளுக்குள் அசாதாரணமான மரணம் நேரிட்டிருப்பதாகவாகிலும் தமக்குத் தெரியவரும்பட்சத்தில், அந்த விஷயத்தைக்குறித்து அதிசமீபத்திலுள்ள பிரதேச அதிகாரிக்கு உடனே தெரிவிக்கவேண்டும்.

10. யாதொரு மியுனிஸிபல் கௌன்ஸிலின் அல்லது யூனியன் பஞ்சாயத்தின் சேர்மனாவது, பஞ்சாயத்து இல்லாமலிருக்கும் யாதொரு கிராமத்தில் அதன் பெரியதனக்காரராவது - தொத்துவியாதி சம்பந்தப்பட்ட இடத்திலிருந்து வருகிறதாக சந்தேகிக்கப்படும் யாதொரு நபரை, அவருடைய உடுப்புகளும் அவர் தம்முடன் கொண்டுவரும் இதர சாமான்களும் ஆறு மணிநேரத்துக்குக் குறையாமல் நேரில் சூரிய வெப்பத்திலிருக்கும்படியாக முழுவதும் போட்டுவைக்கப்பட்டிருந்தாலொழிய, இரண்டு தினங்களுக்கு மேற்படாத ஒரு காலத்துக்குப் பட்டணத்துக்குள்ளாவது கிராமத்துக்குள்ளாவது பிரவேசிக்கக்கூடாதென்று தடுக்கலாம். மேலும், அவர் - தானிய மூட்டைகளை வண்டிகளிலிருந்து அப்புறப்படுத்தி ஒவ்வொரு மூட்டையின் ஒவ்வொரு பக்கமும் இரண்டு மணிநேரத்துக்குக் குறையாமல் நேரில் சூரிய வெப்பத்திலிருக்கும்படியாகப் போட்டுவைக்கப்படுகிறவரையில் பட்டணத்துக்குள்ளாவது கிராமத்துக்குள்ளாவது எந்த தானிய ஒப்படையையும் கொண்டுவரக்கூடாதென்று தடுக்கலாம்.

11. (1) ப்ளேக் சம்பந்தமாய் வேலை செய்வதற்காக அமர்த்தப்பட்டிருக்கிற பிரதி இன்ஸ்பெக்டர், மேஸ்திரி, சேவகன், காவற்காரன், கூலிக்காரன், குப்பைக்காரன் அல்லது குற்றேவல் செய்யும் இதர ஊழியக்காரனும் - அடியிற்கண்டதற்கு மாறாக எழுத்துமூலமாய் உடன்படிக்கை செய்துகொண்டிராதபட்சத்தில், துர்நடத்தைக்காக வேலையிருந்து நீக்கப்பட்டாலும், குறித்த ஒரு கால அளவுக்கு அமர்த்திக்கொள்ளப்பட்டிருந்து அக்கால அளவு முடிந்த பிறகு வேலையிலிருந்து அனுப்பிவிடப்பட்டாலுமன்றி மற்றப்படி, வேலையிலிருந்து அவர்களை அனுப்பிவிடுவதற்கு முன்னே ஒரு மாத நோடிஸாகிலும் அதற்குப் பர்த்தியாக ஒரு மாதச் சம்பளமாகிலும் பெற்றுக்கொள்ள அர்ஹராவார்கள். அப்பிரகாரமே, கூலியாட்களை வேலையிலிருந்து அனுப்பிவிடுவதற்கு முன்னே அந்தக் கூலியாட்களை சர்ப்பரா செய்திருக்கிற ஒவ்வொருவரும் ஒரு மாத நோடிஸ் பெற்றுக்கொள்ள அர்ஹராவார்.

(2) அப்படிப்பட்ட இன்ஸ்பெக்டராவது மேஸ்திரியாவது சேவகனாவது காவற்காரனாவது கூலிக்காரனாவது குப்பைக்காரனாவது குற்றேவல் செய்யும் இதர ஊழியக்காரனாவது - அடியிற்கண்டபடி செய்யத் தமக்கு அனுமதி கொடுப்பதாக எழுத்துமூலமான உடன்படிக்கை ஏற்பட்டிராமலும் நியாயமான காரணமில்லாமலும் ஒரு மாத நோடிஸ் கொடாமலே தன்னுடைய உத்தியோகத்தை ராஜிநாமா கொடுக்கவுங்கூடாது, தன்னுடைய அலுவல்களைச் செய்யாமல் நின்றுபோகவுங்கூடாது, தன்னுடைய அலுவல்களில் எதையும் செய்துமுடிக்க அசட்டை பண்ணவுங்கூடாது, நிராகரிக்கவுங் கூடாது. அந்தப்படியே, கூலியாட்களையாவது குற்றேவல் செய்யும் இதர ஊழியக்காரர்களையாவது சர்ப்பரா செய்கிறவர் எவரும் ஒரு மாத நோடிஸ் கொடாமல் தாம் சர்ப்பரா செய்த கூலியாட்களை அல்லது ஊழியக்காரர்களை வேலைக்குப் போகாமல் நிறுத்திவிடக்கூடாது.

12. இந்த ரெகுலேஷன்களினாலாவது அவைகளின்படியாவது கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைச் செலுத்துவது காரணமாக யாதொரு சொத்து சேதப்பட்டாலும் அல்லது அழிந்துபோனாலும், கலெக்டரானவர் - சேதத்தைச் சீர்ப்படுத்தவாகிலும், அழிந்துபோன சொத்தைப் பர்த்திசெய்யவாகிலும் பிடிக்கும் செலவுக்குப் போதுமானதென்று தாம் கருதக்கூடிய ஒரு தொகையைப் பிரதிபலனாக சொந்தக்காரருக்குக் கொடுக்கவேண்டும்.

குறிப்புகள்.—(1) ப்ளேக் ரெகுலேஷன்களானவை பெருவாரி வியாதிகளைக் குறித்த ஆக்டின்படி கவர்ன்மென்டார் முறைமையாய்ச் செய்து பிறப்பித்திருக்கும் உத்தரவுகளாயிருக்கிறபடியால், அவைகளின்படி நடவாதவர்மேல் பிராது செய்வதற்காக முன்னதாய் எவ்வித அனுமதியும் பெறவேண்டுமென்னும் அவசியமில்லை (1899-ம்௵த்து 561-ம் நம்பர் க்ரிமினல் அப்பீலில் ஹைகோர்ட்டார் செய்த தீர்ப்பு).

(2) 1898-ம்௵ நவம்பர்௴ 18௳ பிறந்த 687-ம் ந. கம்மாண்ட் ஆர்டரினால், மதராஸ் கம்மாண்டிலுள்ள சகல ராங்குகளும் ப்ளேக் ரெகு

லேஷன்களுக்குக் கீழ்படிந்து நடக்கவேண்டுமென்று உத்தரவாயிருக்கிறது; ஆகவே, ஷை ரெகுலேஷன்களை எவ்விதத்திலாகிலும் மீறி நடந்தால், அது இராணுவ சம்பந்தமான குற்றத்தைப்போல தண்டிக்கப்படத்தக்கதாகும். இராணுவ பென்ஷனர்கள் எவ்விதமாயாவது இந்த ரெகுலேஷன்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்காவிட்டாலும் அவைகளை வேண்டுமென்று அசட்டைசெய்தாலும் அல்லது ப்ளேக் சம்பந்தமான அலுவலைச் செய்துகொண்டிருக்கும் யாதொரு உத்தியோகஸ்தருக்குத் தடை உண்டாக்கினாலும், அதனால் தங்களுடைய பென்ஷன்களை வாங்கிக்கொண்டே யிருப்பதற்கு கவர்ன்மென்டாரால் அவசியமான திட்டமாக எண்ணப்படுகிற நன்னடக்கைக்குப் பாதகமுண்டாவதாக கருதப்படுமென்றும், யாதொரு பென்ஷனர் அப்படிப்பட்ட குற்றம் செய்தால் அவர் தம்முடைய பென்ஷன் உடனே நிறுத்தப்படுவதற்கும், குறைக்கப்படுவதற்கும் அல்லது நிலையாக நிறுத்திவிடப்படுவதற்கும் உள்ளாவாரென்றும் ஷை பென்ஷனர்களுக்கு (1898-ம் ௵ டிஸெம்பர் ௴ 14௳ பிறந்த ஸூபரின்டெண்டென்டின் 2-ம் நம்பர் சுற்று உத்தரவில்) எச்சரிக்கை செய்திருக்கிறது.

எச். ஆர். உஜிலி,
கவர்ன்மென்ட் டெப்யுடி ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.